**ஏப்ரல் – 13**

# தமிழ்நாடு செய்திகள்

## 16வது தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தல்

- சமீபத்திய 16வது சட்டமன்றத் தேர்தலில் தமிழ்நாடு மாநிலத்தில் 72.78% வாக்குகள் பதிவாகி உள்ளன.
- 83.92% வாக்குப் பதிவுடன் கரூர் மாவட்டம் முதலிடத்தில் உள்ளது.
- அதனையடுத்து அரியலூர் (82.47%) மற்றும் தர்மபுரி (82.35%) ஆகியவை உள்ளன.
- சென்னையில் 59.06% என்ற அளவில் குறைவான வாக்குகளே பதிவாகியுள்ளன.




# பொருளாதாரச் செய்திகள்

## நுகர்வோர் நம்பிக்கை ஆய்வு

- சமீபத்தில் இந்திய ரிசர்வ் வங்கியானது நுகர்வோர் நம்பிக்கை ஆய்வறிக்கையை வெளியிட்டது.
- இந்த ஆய்வானது நாட்டின் முக்கிய நகரங்களில் சுமார் 5,000 நபர்களிடையே மேற்கொள்ளப்பட்டது.
- இந்த ஆய்வு கீழ் உள்ள ஐந்து பொருளாதாரக் குறியீடுகள் குறித்த நுகர்வோரின் கருத்துகளின் அடிப்படையில் நடத்தப் படுகிறது.
    - வேலை வாய்ப்பு நிலை,
    - பொருளாதார சூழல்,
    - விலைவாசி நிலவரம்,
    - செலவினம் மற்றும்
    - வருமானம்
- நுகர்வோர் நம்பிக்கை ஆய்வில் தற்கால நிலவரக் குறியீடு மற்றும் எதிர்கால

எதிர்பார்ப்புகள் குறியீடு (Current Situation Index and Future Expectations Index) என்ற இரு முக்கிய குறிகாட்டிகள் உள்ளன.

***முக்கியத் தகவல்கள்***

- 2021 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் 55.5 புள்ளிகளாக இருந்த நுகர்வோர் நம்பிக்கை குறியீடு 2021 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் 53.1 புள்ளிகளாக குறைந்துள்ளது.
- 2021 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் 117.1 ஆக இருந்த எதிர்கால எதிர்பார்ப்புகள் குறியீடு 2021 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் 108.8 ஆக குறைந்தது.
- இக்குறியீடானது 100க்கு மேல் இருந்தால் அது நம்பிக்கையையும் 100க்கு குறைவாக இருந்தால் அவநம்பிக்கையையும் குறிக்கிறது.

## அரசுப் பிணையங்களை கையகப்படுத்தும் திட்டம்

- சமீபத்தில், இந்திய ரிசர்வ் வங்கி GSAP 1.0 எனப்படும் அரசுப் பிணையங்களை கையகப்படுத்தும் திட்டத்தினை (Government Security Acquisition Programme) அறிவித்து உள்ளது.
- இத்திட்டத்தின் கீழ், ரூ.1 டிரில்லியன் மதிப்பிலான (அல்லது ஒரு லட்சம் கோடி ரூபாய்) அரசுப் பத்திரங்களை மத்திய வங்கி வாங்கிக் கொள்ளும்.
- முதலில் ரூ.25,000 கோடி மதிப்பிலான கையகப்படுத்துதலானது 2021 ஆம் ஆண்டு ஏப்ரல் 15 அன்று மேற்கொள்ளப்படும்.
- GSAP 1.0 திட்டம் பத்திரச் சந்தைக்கு மிக அதிக ஆதரவினை அளிக்கும்.
- இந்த ஆண்டு அரசின் கடன் வாங்குதல் (borrowing) அதிகரித்ததால் இந்தியச் சந்தையில் எந்தவொரு இடையூறும் ஏற்படாது என்பதை இந்திய ரிசர்வ் வங்கி உறுதி செய்ய வேண்டும்.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## காலநிலை மாற்றத் தளம்

- பாதுகாப்பு மற்றும் காலநிலை சார்ந்த நடவடிக்கைகளுக்காக நிதி வழங்குதல் பற்றி ஏழை நாடுகளுக்கு அறிவுரை வழங்குவதற்கான தளம் ஒன்றினை உலக வங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியம் (IMF) தொடங்கியுள்ளது.
- இந்த இரு நிதி நிறுவனங்களும் ஏழை நாடுகளின் கடன் சுமையைக் குறைப்பதற்கான பேச்சுவார்த்தையில் காலநிலை மாற்றம் எனும் காரணியை முன்னெடுக்க இத்தளத்தினை உபயோகிக்கும்.
- உலக வங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் கூற்றுப்படி இரு உலகளாவியப் பிரச்சினைகள் உள்ளன.
- அவையாவன
    - ஏழை நாடுகளின் அதிக கடன் சுமையை மறுசீரமைத்தல் (அ) குறைப்பதற்கான தேவை.
    - காலநிலை மாற்றத்தை ஏற்படுத்தும் புதைபடிவ எரிபொருள்களின் மாசு வெளியேற்றத்தைக் குறைப்பதற்கான தேவை.
- எனவே, காலநிலை மாற்றத்தை கடன் மறுசீரமைப்புச் செயல்பாடுகளில் சேர்ப்பது இவற்றைக் குறைப்பதற்கு ஊக்கமளிக்கும்.

# மாநிலச் செய்திகள்

## மாஸ்க் அபியான் – ஒடிசா

- ஒடிசா முதல்வர் நவீன் பட்நாயக் சமீபத்தில் 14 நாட்களுக்கான 'மாஸ்க் அபியான்' என்ற முன்னெடுப்பினைத் தொடங்கி வைத்தார்.
- இந்த முன்னெடுப்பின் முக்கிய நோக்கம் முகக்கவசம் (Mask) அணிவதை பழக்கமாக்க செய்வதேயாகும்.
- தற்போது அதிகரித்து வரும் கோவிட்-19 தொற்றுகளைக் கட்டுப்படுத்துவதில் இது பெரும் பங்கினை ஆற்றும்.

# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## சர்வதேச வனச்சரகர் விருது

- இராமநாதபுரம் வனச்சரகர் S. சதீஷிற்கு சர்வதேச வனப்பாதுகாவலர் விருது வழங்கப் பட்டுள்ளது.
- இவ்விருது சர்வதேச இயற்கைப் பாதுகாப்பு ஒன்றியம் (IUCN - International Union for Conservation of Nature), பாதுகாக்கப்பட்ட பகுதிகளுக்கான உலக ஆணையம் (WCPA - World Commission on Protected Areas), சர்வதேச வனச்சரகர் கூட்டமைப்பு, உலகளாவிய வனவிலங்குப் பாதுகாப்பு அமைப்பு மற்றும் வனப் பாதுகாப்பு நட்பு நாடுகள் ஆகியவற்றால் ஒன்றிணைந்து அறிவிக்கப்படுகிறது.
- இவ்விருதினைப் பெறும் 10 நபர்களுள் இவரும் ஒருவராவார்.
- சதீஷ் உத்தரகாண்ட்டிலுள்ள இராஜாஜி தேசியப் பூங்காவை சேர்ந்த மகேந்திர கிரியுடனும், கம்போடியா, மியான்மர், ரஷ்யா, ஜார்ஜியா, ஸாம்பியா, மடகாஸ்கர், கோட்டிவார் (ஐவரி கோஸ்ட்) மற்றும் கொலம்பியா ஆகிய நாடுகளைச் சேர்ந்த எட்டு வனப் பாதுகாவலர்களுடன் இவ்விருதினைப் பகிர்ந்து கொள்கிறார்.

## வீர்ணி விருது

- இந்தியத் தடகள வீரர் (Sprinter) தூத்தி சந்த் அவர்கள் சத்தீஸ்கரின் முதல் வீர்ணி விருதிற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
- இவ்விருது சத்தீஸ்கர் மாநில அரசால் வழங்கப்படுகிறது.
- இவ்விருது விளையாட்டுத் துறை உட்பட வெவ்வேறு துறைகளில் இந்தியப் பெண்களின் பங்களிப்பிற்கு அங்கீகாரம் அளிக்கிறது.

*குறிப்பு*

- 2019 ஆம் ஆண்டில் இத்தாலியில் நடைபெற்ற உலகப் பல்கலைக்கழகப் போட்டிகளில் தங்கம் வென்ற முதல் இந்தியப் பெண்மணி இவராவார்
- இவர் 2018 ஆம் ஆண்டு ஜகர்த்தா ஆசியப் போட்டிகளின் 100 மற்றும் 200 மீட்டர் பிரிவில் வெள்ளிப் பதக்கம் வென்றவராவார்.
- இவை தவிர தூத்தி அவர்கள், 100 மீட்டர் தொலைவினை 11.22 வினாடிகளில் கடந்து தேசிய அளவில் சாதனை புரிந்துள்ளார்.




## இளவரசர் பிலிஃப் காலமானார்

- ஐக்கிய ராஜ்ஜியத்தின் அரசி இரண்டாம் எலிசபெத்தின் கணவர் இளவரசர் பிலிஃப் காலமானார்.
- இவரின் வயது 99 ஆகும்.
- 70 ஆண்டுகளாக பிரிட்டிஷ் ராஜ வம்சத்தின் முக்கிய நபராக இளவரசர் பிலிஃப் திகழ்ந்து வந்தார்.
- இவர் அலுவல் முறையில் எடின்பெர்க்கின் பிரபு (The Duke of Edinburg) என்று அழைக்கப் பட்டார்.

# விளையாட்டுச் செய்திகள்

## இரண்டு கின்னஸ் உலக சாதனைகள்

- இந்திய ராணுவத்தின் துணைநிலை படைத்தலைவர் பாரத் பன்னு இரண்டு கின்னஸ் உலக சாதனையைப் படைத்துள்ளார்.
- 2020 ஆம் ஆண்டு அக்டோபர் முதல் அவர் தனிநபராக மேற்கொண்ட விரைவான சைக்கிள் ஓட்டத்திற்காக இது அவருக்கு வழங்கப்பட்டுள்ளது.
- இவரின் முதல் சாதனையானது 2020 ஆம் ஆண்டு அக்டோபர் 10 அன்று லே முதல் மணாலி (472 கி.மீ. தொலைவு) வரையில் வெறும் 35 மணி 25 நிமிடங்களில் அவர் மேற்கொண்ட சைக்கிள் பயணமாகும்.
- இவரது இரண்டாவது சாதனை 5,942 கி.மீ. நீளமுடைய தங்க நாற்கரப் பாதையில் அவர் 14 நாட்கள், 23 மணி 52 நிமிடம் என்ற நேரத்தில் சைக்கிள் பயணம் மேற்கொண்டதாகும்.
- தங்க நாற்கரப் பாதை டெல்லி, மும்பை, சென்னை மற்றும் கொல்கத்தா ஆகிய பகுதிகளை இணைக்கின்றது.

# முக்கிய தினங்கள்

## உலக மேசைப் பந்தாட்ட (டேபிள் டென்னிஸ்) தினம் – ஏப்ரல் 06

- உலக மேசைப் பந்தாட்ட தினமானது சர்வதேச மேசைப் பந்தாட்டக் கூட்டமைப்பின் முன்னெடுப்பாகும்.
- இத்தினம் உலகின் ஒவ்வொரு பகுதியிலும் உலகளவில் மேசைப் பந்தாட்ட விளையாட்டை ஊக்குவிப்பதற்காக உலகம் முழுவதும் ஆண்டுதோறும் கடைபிடிக்கப் படுகிறது.
- மேலும் இத்தினம் மேம்பாடு மற்றும் அமைதிக்கான சர்வதேச விளையாட்டுத் தினத்தையும் குறிக்கிறது.
- பாலினச் சமத்துவம் மற்றும் அதிகாரமளித்தல் போன்றவற்றை ஊக்குவிக்க மேசைப் பந்தாட்டத்தைப் பிரபலமாக்கவும், உலகளாவியதாகவும், அனைத்தையும் உள்ளடக்கியதாகவும் (popular, universal and inclusive) அதை மாற்றுவதற்கு 2021 ஆம் ஆண்டு உலக மேசைப் பந்தாட்ட தினம் ஈடுபாடு செலுத்தும்.
- 2021 ஆம் ஆண்டு உலக மேசைப் பந்தாட்ட தினமானது ஐ.நா.வின் 5வது நீடித்த மேம்பாட்டு இலக்கான பாலினச் சமத்துவத்தை அடைவதை நோக்கமாகக் கொண்டு உள்ளது.




## உலக ஹோமியோபதி தினம் – ஏப்ரல் 10

- உலக ஹோமியோபதி தினமானது ஹோமியோபதி பற்றியும் மருத்துவ உலகில் அதன் பங்கினைப் பற்றியும் விழிப்புணர்வினைப் பரப்புவதற்காக ஒவ்வொரு வருடமும் கொண்டாடப்படுகிறது.
- இத்தினம் ஜெர்மனியின் மருத்துவரான டாக்டர் கிறிஸ்டியன் பிரட்ரிக் சாமுவேல் ஹென்மேனின் பிறந்த நாளினை நினைவு கூறுகிறது.
- இவர் ஹோமியோபதி எனப்படும் மாற்று மருத்துவ முறையை நிறுவியவர் ஆவார்.
- இந்த ஆண்டு (2021) ஹென்மேனின் 266வது பிறந்த நாளாகும்.
- ஆயுஷ் அமைச்சகத்தின் மத்திய ஹோமியோபதி ஆராய்ச்சி மன்றமானது (CCRH – Central Council for Research in Homeopathy) உலக ஹோமியோபதி தினத்தன்று புதுடெல்லியில் ஓர் இரண்டு நாள் அறிவியல் மாநாட்டினை ஏற்பாடு செய்தது.
- இம்மாநாட்டின் கருத்துரு, “ஹோமியோபதி – ஒருங்கிணைந்த மருத்துவத்திற்கானப் பாதை” (Homeopathy – Roadmap for Integrative Medicine) என்பதாகும்.

## பாதுகாப்பான தாய்மைக்கான தேசிய தினம் – ஏப்ரல் 11

- பாதுகாப்பான தாய்மைக்கான தேசிய தினம் இந்திய வெள்ளை நாடா கூட்டிணைவின் (WRAI – White Ribbon Alliance India) ஒரு முன்னெடுப்பாகும்.
- கர்ப்ப காலத்தில் குழந்தை பிறப்பின் போதான நலம் மற்றும் மகப்பேறு வசதிகளைப் போதுமான அளவில் மகளிர் பெறுவதனை உறுதி செய்வதற்காக இத்தினம் கடைபிடிக்கப் படுகிறது.
- மேலும் இத்தினம் கஸ்தூரிபாய் காந்தியின் பிறந்த நாளையும் குறிக்கிறது.
- கஸ்தூரிபாய் காந்தி தேசத் தந்தை மோகன்தாஸ் கரம்சந்த் காந்தியின் மனைவி ஆவார்.
- 1800 நிறுவனங்களின் கூட்டமைப்பான WRAI அமைப்பின் வேண்டுகோளுக்கு இணங்க 2003 ஆம் ஆண்டில் இந்திய அரசு ஏப்ரல் 11 ஆம் தேதியினைப் பாதுகாப்பான தாய்மைக்கான தேசிய தினமாக அறிவித்தது.
- பாதுகாப்பான தாய்மைக்கான தேசிய தினத்தை சமூக ரீதியில் அறிவித்த உலகின் முதல் நாடு இந்தியா ஆகும்.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★